1.ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே பர
மானந்தம் ஆனந்தம் ஆனந்தமே (2)

திரு குமரனும் மணமகன் ஆனாரே
தேவசேனாவும் மணமகள் ஆனாளே
வன வள்ளியும் மணமகள் ஆனாளே

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே பர
மானந்தம் ஆனந்தம் ஆனந்தமே

வந்தவர்க்கும் பார்த்தவர்க்கும் ஆனந்தம்
ஈசனுக்கும் கௌரிக்கும் ஆனந்தம்

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே பர
மானந்தம் ஆனந்தம் ஆனந்தமே

திருமாலுக்கும் திருமகளுக்கும் ஆனந்தம்
நான் முகனுக்கும்  வாணிக்கும் ஆனந்தம்

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே பர
மானந்தம் ஆனந்தம் ஆனந்தமே

ஆனந்தமே (3)

உ.மாலை சாற்றினாள்
வள்ளி மாலை மாற்றினாள்
மாலை மாற்றினாள்
தெய்வானை மாலை சாற்றினாள்

ஞான வடிவேலன் அவன்  அழகு திரு மார்பிலே (2)
மையலாய் தையலாய் மா மலர் கரத்தினாள் (2)

கார்த்திகேயனை அன்பர் தங்கள் நேசனை (2)
ஆசைக்குறி பூசுரர்கள் பேசி மிக்க வாழ்த்திட

கார்த்திகேயனை அன்பர் தங்கள் நேசனை
ஆசைக்குறி பூசுரர்கள் பேசி மிக்க வாழ்த்திட

அன்புடன் இன்பமாய் தெய்வானை கரத்தினால்
மாலை மாற்றினாள்
தெய்வானை மாலை சாற்றினாள்

அன்புடன் இன்பமாய் வள்ளியின்
கரத்தினால்
மாலை சாற்றினாள்
வள்ளி மாலை மாற்றினாள்

ஞான வடிவேலன் அவன்  அழகு திரு மார்பிலே (2)
மையலாய் தையலாய் மா மலர் கரத்தினாள் (2)

மாலை சாற்றினாள்
வள்ளி மாலை மாற்றினாள்
மாலை மாற்றினாள்
தெய்வானை மாலை சாற்றினாள்

**3.**ரத்ன ஊஞ்சலில் ஆடினாள்
செந்தில் நாதனை பாடினாள் (3)

முத்து சரங்கள் குலுங்கிட  ரத்னமாலை அசைந்திட (2)
சுற்றிலும் சகிகள் விளங்கிட தெய்வயானை மகிழ்ந்திட (2)

.ரத்ன ஊஞ்சலில் ஆடினாள்
செந்தில் நாதனை பாடினாள் (3)

மண்ணிடத்தில் நேசமாய் அம்பிகையின் பாசமாய் (2)
முருகன் முகம் பிரகாசமாய்  வள்ளி மனம் உல்லாசமாய் (2)

.ரத்ன ஊஞ்சலில் ஆடினாள்
செந்தில் நாதனை பாடினாள் (3)

4. ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அய்யா முருகா ஆடுகவே.

ஆழிப் படுக்கை கொண்டோனின்
அருமை மருகா ஆடுகவே
ஊழி தாண்டி நிற்பானின்
உத்தமச் செல்வா ஆடுகவே
வாழும் மனிதர் யாவருக்கும்
வழிக்குத் துணையாம் வேலவனே
ஆளுங் கவலை ஓடிடவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே.

விண்ணவர் செல்வி தெய்வானை
வேடவர் மகளாம் வள்ளியுடன்
மண்ணகம் சுற்றும் மயிலேறி
மகிமைச் சேவற் கொடியாட
கொண்டிடும் காதல் உணர்வோடு
கூடிய நெஞ்சத் தூஞ்சலிலே
அன்புடன் ஏறி இனிதமர்ந்தே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே.

மண்ணைப் பிளந்து பெரும்பேட்டில்
மாபெரும் அருளுடை வடிவுடனே
பெண்ணின் நல்லார் இருவருடன்
பெருமயில் ஏறி வந்தவனே
கண்ணே தெரியாக் காட்டிடையே
கலங்கித் தவிக்கும் எங்களுக்கே

தண்ணீர் மலையான் வழிகாட்டித்
தனிச்சீர் ஊஞ்சல் ஆடுகவே

5. கல்யாண வைபோகம்

வள்ளி கல்யாண வைபோகமே
தெய்வானை கல்யாண வைபோகமே

சிங்காரவேலவன் செந்தூரம் சாற்றி
மங்கை வள்ளி மகிழ மணமாலை இட்ட (2)

வள்ளி கல்யாண வைபோகமே
தெய்வானை கல்யாண வைபோகமே

வானவர்கள் மனம் மகிழ்ந்து மலர் மாறி பொழிய
நாணமோடு தெய்வானை எதிர் மாலை சாற்ற(2)

வள்ளி கல்யாண வைபோகமே
தெய்வானை கல்யாண வைபோகமே

தேவர் கன கூட்டம் எங்கும் மகிழ்ந்து கொண்டாட
தேன் அமுத இன்ப இசை விண்ணளவும் எட்ட (2)

வள்ளி கல்யாண வைபோகமே
தெய்வானை கல்யாண வைபோகமே

சந்தனமும் அகில் மணமும் திசையெங்கும் சூழ
பந்தல் எங்கும் மாணிக்க வைரங்கள் ஒளிர(2)

வள்ளி கல்யாண வைபோகமே

தெய்வானை கல்யாண வைபோகமே